செ.வெ.எண்: 12 நாள்: 06.04.2019

**கரூர் மாவட்டம்**

**தேர்தல் பணியில் ஈடுபடவுள்ள மண்டல அலுவலர்களுக்கான பயிற்சிக் கூட்டம் தேர்தல் நடத்தும் அலுவலரும் மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.த.அன்பழகன்.இஆப., அவரகள் தலைமையில் நடைபெற்றது**

அதன் விபரம் வருமாறு:

நடைபெறவுள்ள மக்களவைப்பொதுத்தேர்தலில் கரூர் மாவட்டத்திற்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் பணியாற்றவுள்ள மண்டல அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும், தலைமை வாக்குப்பதிவு அலுவலர் வாக்குப்பதிவு கண்காணிப்பு செயலி மூலம் தேர்தல் நடத்தும் அலுவலருக்கு அறிக்கை அனுப்பும் வழிவகைகளை மேற்கொள்ளுதல் குறித்துமான பயிற்சிக்கூட்டம் தேர்தல் நடத்தும் அலுவலரும் மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று(6.03.2019) நடைபெற்றது

இக்கூட்டத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் பேசியதாவது:

நடைபெறவுள்ள மக்களவைப்பொதுத்தேர்தலில் பணியாற்றவுள்ள அனைத்து அலுவலர்களும் நேர்மையாகவும், கடமை உணர்வுடனும் பணியாற்ற வேண்டும். மண்டல அலுவலர்களாகிய நீங்கள் இங்கு வழங்கப்படும் பயிற்சியை வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு வழங்க உள்ளீர்கள். எனவே, தங்களுக்கு இந்தப்பயிற்சி வகுப்பின்போது ஏற்படும் சந்தேகங்களை வெளிப்படையாக கேட்டு தெரிந்துகொண்டு, அனைத்தையும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு நடத்தப்படக்கூடிய பயிற்சி வகுப்பில் தெளிவாக அவர்களுக்கு புரியும்படி எடுத்துக்கூற வேண்டும்.

குறிப்பாக தலைமை வாக்குப்பதிவு அலுவலர், வாக்குப்பதிவு கண்காணிப்பு செயலி மூலம் தேர்தல் நடத்தும் அலுவலருக்கு உடனுக்குடன் அறிக்கை அனுப்பும் வழிவகைகள் குறித்து மண்டல அலுவலர்களாகிய உங்களுக்கு இன்றைய பயிற்சி வகுப்பில் தெளிவாக எடுத்துரைக்கப்படும் கருத்துக்களை நீங்கள் அனைவரும் நாளை (7.04.2019) வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு நடைபெறவுள்ள பயிற்சி வகுப்பில் எடுத்துரைக்க வேண்டும்.

குறிப்பாக வாக்குச்சாவடி மையத்திற்குள் வாக்குப்பதிவு துவங்குவதற்கு முன்னதாக மேற்கொள்ளப்படவேண்டிய மின்னனு வாக்குப்பதிவு இயந்திரத்தை கையாளுதல், மாதிரி வாக்குப்பதிவு நடத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை அனைவரும் மிகுந்த கவனத்துடன் செய்ய வேண்டும். ஒவ்வொரு சட்டமன்றத்தொகுதியிலும் உள்ள வாக்குச்சாவடி மையங்களில் 50 சதவீத வாக்குச்சாவடி மையங்கள் சி.சி.டி.வி. கேமரா மூலம் நேரலையாக இந்திய தேர்தல் ஆணையத்தின் மூலம் கண்காணிப்படும். குறிப்பாக பதற்றமான வாக்குச்சாவடிகள், அசம்பாவிதங்கள் ஏதும் நடக்க வாய்ப்பிருப்பதாக கருதப்படும் வாக்குச்சாவடிகள் என கரூர் மாவட்டம் முழுவதும் 69 வாக்குச்சாவடிகளில் 100 சதவீத சி.சி.டிவி. கேமராவின் மூலம் நேரலலை கண்காணிப்புக்குள் கொண்டுவரப்படும்.

இந்த தேர்தலில் புதிதாகப்பயன்படுத்தப்படவுள்ள VVPAT எனப்படும், வாக்காளர் யாருக்கு வாக்களித்தார் என்பதை அவருக்கு மட்டும் காட்டும் இயந்திரத்தின் செயல்பாடு குறித்து வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு தெளிவாக விளக்க வேண்டும். தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் தாங்கள் பணிபுரியும் தொகுதிக்குள் வசித்து வந்தால் படிவம் 12A மூலமும், பிறதொகுயில் இருந்தால் படிவம் 12 மூலம் தபால் வாக்கு அளிக்கலாம் என்ற விபரங்களை மண்டல அலுவலர்கள் வாக்குச்சாவடி அலவலர்களுக்கு விரிவாக எடுத்துக்கூற வேண்டும் என்று தெரிவித்தார்.

தலைமை வாக்குப்பதிவு அலுவலர் வாக்குப்பதிவு கண்காணிப்பு செயலி மூலம் தேர்தல் நடத்தும் அலுவலருக்கு அறிக்கை அனுப்பும் வழிவகைகளை மேற்கொள்ளுதல் குறித்த பயிற்சி வகுப்பினை தேசிய தகவலியல் அலுவலர் திரு.கண்ணன் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.செல்வசுரபி, கூடுதல் அலுவலர் திரு.மோகன் உள்ளிட்ட அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.